<u>**In the Court of the District Munsif, Eraniel**</u>

**Original Suit No. 83/2018** **Date:28.01.2026.**

**(DW1)-** ஆல்பர்ட் ஜேசுராஜ்

<u>**வாதி** தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் என்னவேலை செய்கிறேன் என்றால் ஓட்டுநராக உள்ளேன். கார்லோஸ் மகன் அந்தோணிமுத்து எனது தகப்பனார் என்றால் சரிதான். அவர் இப்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் 1ம் பிரதிவாதி எனது அம்மா என்றால் சரிதான். வழக்கின் 2ம் பிரதிவாதி நான் என்றால் சரிதான். மற்ற பிரதிவாதிகள் எனது சகோதர சகோதரிகள் என்றால் சரிதான். வாதி தாக்கல் செய்த வழக்கை பற்றி தெரியுமா என்றால் தெரியும். வாதி என்ன பரிகாரம் கோரியுள்ளார் என்றால் பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு எனக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் வழக்கறிவிப்பு அனுப்பி இருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2. வாதி இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு எனக்கும் மற்ற பிரதிவாதிகளுக்கும் வழக்கறிவிப்பு அனுப்பி இருந்தார் என்றாலும் அதை எனது அம்மா பெற்றுக்கொண்டுள்ளார் என்றாலும் மற்ற பிரதிவாதிகள் மற்றும் நான் அதை வாங்காமல் வாதிக்கே திருப்பப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் கடன் பெற்ற விபரம் எனக்கு தெரியும் என்றாலும் மேற்படி அறிவிப்பு அதுசம்மந்தமாக அனுப்பப்பட்டுள்ளது என்பதை தெரிந்துகொண்டே நான் அதை பெற்றுக்கொள்ளாமல் திருப்பிவிட்டேன்

என்றாலும் சரியல்ல.

3. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலம் மற்ற பிரதிவாதிகளுக்கும் சேர்த்து தான் தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் எதிருரை தாக்கல் செய்யவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தலக்குளம் புதிய சர்வே எண்.450/8 உள்ள சொத்து எனது அப்பாவிற்கு உரிமைப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் உண்மை என்றால் உண்மையில்லை.

4. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தின் எல்கை விபரங்கள் சரியானது என்றால் சரியானதுதான். மேற்படி ஆவணத்தில் புதிய சர்வே எண்.450/8 க்கு பழைய சர்வே எண்.8710 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது சாட்சி சர்வே எண் 450/8 என்றால் எனது அப்பாவின் சொத்து கிடையாது என்றும் சர்வே எண் 450/9 தான் எனது அப்பாவின் சொத்து என்றும் குறிப்பிடுகிறார்.

5. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள கையெழுத்து எனது அப்பாவின் கையெழுத்து என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் எனது அப்பாவின் ஓட்டுநர் உரிமத்தின் ஆவண எண் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 18.06.2003 ல் எனது தகப்பனார் கல்லுக்கூட்டத்தை சார்ந்த பெனான்சிஸ் பெலார்மின் என்பவருக்கு கடன் பெற்றுக்கொண்டதற்கு ஈடாக ஒரு அடமானப் பத்திரமாக வா.சா.ஆ.1 ஐ எழுதிக்கொடுத்தார் என்றால் சரியல்ல.

6. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணம் இரணியல் சப் ரிஜிஸ்ட்ரார் அலுவலகத்தில் பதியப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணம் மேற்படி கல்லுக்கூட்டத்தை சார்ந்த பெனான்சிஸ் பெலார்மின் வாதிக்கு அடமானத்தை மேட் ஓவர் செய்து கொடுத்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி ஆவணம் இரணியல் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் அது உண்மையான ஆவணம் கிடையாது. வா.சா.ஆ.2 ஆனது இரணியல் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றாலும் நான் மேற்படி விபரங்கள் தெரிந்திருந்தும் எனது அப்பா கடனை திரும்ப செலுத்தக்கூடாது என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. மேற்படி வா.சா.ஆ.2 ல் பட்டிகை சொத்து ச.எண் 450/8 என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரியல்ல. பொதுவாக சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணங்களை முறையாக பரிசீலணை செய்துதான் பதிவு செய்வார்கள் என்றால் சரிதான். எனது தகப்பனார் 18.06.2003 ல் வாங்கிய பணத்தை திரும்ப கொடுக்காமல் இறந்துவிட்டதால் மேற்படி பணத்தை மீட்க வேண்டி வாதி அவரது வாரிசுகளான என்னையும் மற்ற பிரதிவாதிகளையும் சேர்த்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

8. எனது அப்பா இறந்த பின்பு அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை அவரது வாரிசுகளான நாங்கள் எடுத்துக்கொண்டோம் என்றால் சரிதான். அதைப்போல் எனது அப்பாவின் கடனையும் அவரது வாரிசுகளான நாங்கள் ஏற்றுக்கொண்டு அதை திருப்பிக் கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால்

சரிதான் ஆனால் அவர் கடன் வாங்கவில்லை. நான் தாக்கல் செய்த எதிர்கோருரிமையில் குறிப்பிட்டுள்ள விவரமான மிரட்டியும் ஆள்மாறாட்டம் செய்தும், ஆவணங்கள் ஏற்படுத்தியிருக்கலாம் என்பது தொடர்பாக நான் காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் எதிர்கோருரிமையில் எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்தாக தலக்குளம் கிராம ச.எண்.450/8 தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் ( சாட்சி ஆவணத்தை பார்த்து பதில் அளிக்கிறார்). வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றாலும் நான் தாக்கல் செய்துள்ள எதிர் கோருரிமை மனு தள்ளுபடி செய்யவேண்டியது என்றாலும் சரியல்ல. நான் இந்நீதிமன்றத்தில் பொய்யான சங்கதிகளை கூறி பொய்சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.